பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**14 02 2026** **SATURDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிபெறும் என்று மத்திய அமைச்சர் திரு. அமித் ஷா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

**2)** நாட்டில் அறிவியல் தொழில்நுட்பத்துறையில் புத்தொழில்கள் தொடங்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக அத்துறைக்கான மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

**3)** இலங்கை நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் தாயகம் திரும்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசை, முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

**4)** தமிழகத்தில் மக்கள் நல்வாழ்வுத்துறையில் பல்வேறு திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

**5)** உலக பாரா பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் பிரமோத் பகத் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<<>>>>>>

புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிபெறும் என்று பிஜேபி மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. அமித் ஷா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

காரைக்காலில் பிஜேபி-யின் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் இன்று உரையாற்றிய அவர், வரும் தேர்தலில் இந்த கூட்டணி 60 சதவீத வாக்குகளை பெறும் என்று கூறினார்.

புதுச்சேரியில் தகவல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் கூடுதல் வேலைவாய்ப்புகள் கிடைக்க அரசு முன்னுரிமை அளித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

அடுத்த ஐந்தாண்டுகளில் புதுச்சேரி வளர்ச்சியடைந்த பகுதியாக முன்னேறும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

அமெரிக்கா உள்ளிட்ட பிற நாடுகள் உடனான வர்த்தக ஒப்பந்தங்கள் மூலம் விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று அவர் தெரிவித்தார்.

இத்தகைய ஒப்பந்தங்கள் மூலம், மீனவர்களுக்கு சர்வதேச சந்தையில் கூடுதல் லாபம் கிடைக்கும் என்றும் திரு அமித் ஷா கூறினார்.

இந்நிகழ்ச்சியில், மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா உள்ளிட்ட பிஜேபி மூத்த தலைவர்கள் கலந்துகொண்டனர்.

<<<<<<>>>>>>

நாட்டில் அறிவியல் தொழில்நுட்பத்துறையில் புத்தொழில்கள் தொடங்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக அத்துறைக்கான மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று தொடங்கிய இதுதொடர்பான மாநாட்டில் பேசிய அவர், உலக அளவில் இந்தியாவில்தான் புத்தொழில் நிறுவனங்கள் அதிகரித்துள்ளதாகவும், புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவித்து அதன்மூலம் இளைஞர்களுக்கு தொழில் தொடங்குவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தவும் அரசு முக்கிய கவனம் செலுத்தி வருவதாக கூறினார்.

முத்ரா திட்டத்தின்கீழ் 30 கோடி இளைஞர்கள் பயன்பெற்றிருப்பதாகவும், இதில் 67 சதவீத்தினர் பெண்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

தங்களது கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமை பெறுவதற்கான நடவடிக்கைகளை இளைஞர்கள் மேற்கொள்ள வேண்டும் என்றும்,

காப்புரிமை பெறும் பட்டியலில் இந்தியா 6-ஆவது இடத்தில் உள்ளதாகவும் கூறினார்.

புதிய கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமை பெறுவதற்காக 2 லட்சத்திற்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

அரசு வேலை என்ற நோக்கில் செயல்படாமல், பிறருக்கு வேலை கொடுக்கும் அளவிற்கு தங்களது கண்டுபிடிப்புகளை பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

ரத்தம் உறைதல் குறைபாட்டை சரி செய்வதற்கான மருத்துவ ஆராய்ச்சிகள் ஊக்குவிக்கப்பட்டு, அதற்கான தீர்வுகள் எட்டும் தருவாயில் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

உலகிலேயே முதல் முறையாக தமிழகத்தில் உள்ள சி எம் சி வேலூர் மருத்துவமனை இந்த ஆய்வில் வெற்றிபெற்றுள்ளது என்று புகழாரம் சூட்டினார்.

தொழில்நுட்ப உதவியை கோரும் நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கான அனைத்து உதவிகளையும் செய்வதற்கு மத்திய அறிவியல் தொழில்நுட்ப ஆராய்ச்சி மையம் தயாராக உள்ளதாக திரு ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

இலங்கை நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் தாயகம் திரும்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசை, முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக, வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருக்கு இன்று அவர் எழுதியுள்ள கடிதத்தில், இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட 12 தமிழக மீனவர்களில் ஒன்பது மீனவர்களை யாழ்பாணம் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

மூன்று மீனவர்களுக்கு ஆறு மாத கடுங்காவல் சிறை தண்டனையும், தலா 11 லட்சத்து 60 ஆயிரம் இலங்கை ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், இலங்கை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட மீனவர்கள் விரைவில் தாயகம் திரும்ப நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வெளியுறவுத்துறை அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதத்தில், முதலமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>>

கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தின் 40-ஆவது பட்டமளிப்பு விழா இன்று நடைபெற்றது.

இதில், தமிழக ஆளுநரும், பல்கலைக்கழக வேந்தருமான திரு ஆர் என் ரவி பங்கேற்று பட்டங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், பல்கலைக்கழக துறைகள் மற்றும் அதன் இணைப்பு கல்லூரிகளை சேர்ந்த ஆயிரத்து 500 பேருக்கு முனைவர் பட்டம் வழங்கப்பட்டது.

மேலும், இளங்கலை, முதுகலை, ஆராய்ச்சிப் படிப்புக்காக 92 ஆயிரத்து 287 பேருக்கு பல்வேறு பாடப்பிரிவுகளில் பட்டங்கள் வழங்கப்பட்டன.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் மக்கள் நல்வாழ்வுத்துறையில் பல்வேறு திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

கோவை மாவட்டம் ரெட்டியாரூரில் இன்று நடைபெற்ற மருத்துவ முகாமில் நலத்திட்ட உதவிகளை வழங்கிய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் இதுவரை நடைபெற்ற மருத்துவ முகாம்கள் மூலம், 17 லட்சத்து 83 ஆயிரம் பேர் பயனடைந்துள்ளதாக கூறினார்.

பெண்களுக்கு ஏற்படும் கர்பப்பை வாய் புற்றுநோய் பாதிப்புகளை தடுப்பதற்கான திட்டம் மூலம் 3 லட்சத்து 38 ஆயிரத்து 649 மாணவிகள் பயன்பெற உள்ளதாக அவர் தெரிவித்தார்.

சென்னையில் 417 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குழந்தைகளுக்கான சிறப்பு மருத்துவமனை அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளதாக திரு மா. சுப்பிரமணியன் கூறினார்.

<<<<<<>>>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் அஇஅதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிபெறும் வாய்ப்பு பிரகாசமாக உள்ளதாக தமாகா தலைவர் திரு ஜி கே வாசன் தெரிவித்துள்ளார்.

கோவையில் இன்று கட்சியின் மண்டல நிர்வாகிகள் உடனான தேர்தல் ஆலோசனை கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழக அரசு அளித்த வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றவில்லை என்று குற்றம் சாட்டினார்.

மாநிலத்தில் சட்டம் — ஒழுங்கு நிலைமை மோசமடைந்துள்ளதாகவும் திரு ஜி கே வாசன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மத்திய அரசு மற்றும் ரிசர்வ் வங்கி இணைந்து, பொதுமக்கள், சிறு வணிகர்கள் மற்றும் மாணவர்களிடையே நிதி சேவைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், நாடு முழுவதும் சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றன.

தென்காசி மாவட்டம் களங்காடு கிராமத்தில் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு கணேசன் தலைமையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில், வங்கி சேவைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — செந்தில் - 45 Sec. )***

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

சென்னை திரு வி க நகர் பகுதியில் நடைபெற்ற மருத்துவ முகாமில் **57** பயனாளிகளுக்கு சுமார் **48** லட்சம் ரூபாய் மதிப்பில் மாநில அமைச்சர் திரு சேகர்பாபு நலத்திட்ட உதவிகளை இன்று வழங்கினார்.

--------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 18-ஆம் தேதி நடைபெறும் என்று ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

---------------

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் ரயில் நிலையத்தில் பயணிகள் வசதிக்காக குளிரூட்டப்பட்ட காத்திருப்போர் அறை திறக்கப்பட்டுள்ளது.

--------------------------

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் புல்வாமா தாக்குதல் நினைவு தினத்தையொட்டி, பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர்.

<<<<<<>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

உலக பாரா பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் பிரமோத் பகத் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

பஹ்ரைனில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 21-12, 21-18 என்ற செட் கணக்கில், இந்தோனேஷியாவின் Mohammed Al Imrane-ஐ வென்றார்.

----------------

புனேயில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா — ஸ்ரீவள்ளி ராஷ்மிகா இணை பட்டம் வென்றது.

------------------------

சென்னை சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் ஹர்மீத் தேசாய் — **Yashaswini Ghorpade** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

இப்போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை **11-9, 11-6, 11-9** என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Payas Jain — Syndrela Das** இணையை வென்றது.

------------

ஐ எஸ் எல் கால்பந்து போட்டி இன்று தொடங்கியது.

-------------

புரோ ஹாக்கி லீக் போட்டியில், இந்தியா இன்று பெல்ஜியத்தை எதிர்கொள்கிறது.

ரூர்கேலாவில் இப்போட்டி இரவு மணி **7.30**-க்கு தொடங்குகிறது.

**<<<<<<END>>>>>>**